**தனமல்வில பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 29 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தனமல்வில பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பிரதேச சபைக்குச் சொந்தமான 95 மயான நிலங்கள் மற்றும் மொரகெட்டிய சந்தியில் அமைந்துள்ள கடையுடன் கூடிய காணி என்பன மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இந்த ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்படுவதாக அறிய தருகின்றேன். |
| (ii) | 2019 ஆம் ஆண்டின் போது சபைக்கு நன்கொடையாக கிடைத்த ரூபா 6,009,602 பெறுமதியான மோட்டார் கேடர் இயந்திரமொன்று மூலதன வருமானக் கணக்கிற்கும் மூலதன செலவின கணக்கிற்கு | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திட்டமிடப்படுவதாக உறுதிப்படுத்துகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | பதிவுசெய்யப்படாமையால் அக்கணக்குகளில் மீதிகள் ரூபா 6,009,602 வீதம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (iii) | மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட ரூபா 1,083,100 ஆன மூலதனச் செலவினம் மீண்டுவரும் செலவினமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 1,687,057,688 தொகையான காணி மற்றும் கட்டிடங்களுக்கான மதிப்பீட்டு அறிக்கை மற்றும் உரித்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் ரூபா 6,999,974 தொகைான தளபாடங்கள் மற்றும் பொருத்திகளுக்காக நிலையான சொத்துப் பதிவேடு என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கணக்கு கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டாளரின் அறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் நிலையான சொத்துக்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்துவதாகவும் அறிய தருகின்றேன். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| (i) | 134(1) ஆம் பிரிவு | முன்னேற்றமடைந்த பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை | முன்னேற்றமடைந்த பிரதேசங்கள் இனங்காணணப்பட்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறவிடப்பட்டிருக்கவில்லை. | எடுக்க வேண்டும். | வரைபடமாக்கப் பட்டுள்ளதாகவும் மொனறாகலை உதவி உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் அங்கீகாரத்துடன் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |
| (ii) | 147(i) மற்றும் 149 ஆம் பிரிவுகள் | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்துள்ள அல்லது அந்த சபை அங்கீகரித்த பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற ஹோட்டல் மற்றும் தங்குமிடங்கள் என்பவற்றிலிருந்து கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வரி அறவிடப்படாத நிறுவனங்களிடமிருந்து 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கு அறவிடப்பட வேண்டிய கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |
| (iii) | 126(vii)(ஏ) | உப விதி விதித்து மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைக்கும் இடங்களிலிருந்து கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி மன்ற திணைக்களத்தின் ஈடுபாட்டுடன் பிரதேச சபைகளுக்காக உப விதியொன்றை வரைவாக்க வேண்டியதுடன் அச்செயற்பாடு முடிவடைந்தவுடன் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை<br>------------------------------ | | | |
| | XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு | 2014 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து கொண்டு வரப்படுகின்ற 16 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 124,147 தொகையான ஊழியர் கடன் அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவையான ஊழியர் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஊழியர் கடன்களை தீர்வுசெய்வது தொடர்பாக கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதும் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்வதாக அறிய தருகின்றேன். |
| (இ) | 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | சபையினால் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த 42 கட்டிட திட்டங்களுக்குரிய நிர்மாணங்களைப் பரீட்சித்து இணக்கச் சான்றிதழ் விநியோகிக்கப்பட வில்லை | வெளிக்கள பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். | இணக்கச்சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்ங்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படவில்லையென அறிய தருகின்றேன் |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | நி.பி 571 | ரூபா 466,491 கூட்டுத்தொகையான வைப்புச் செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகளை விஞ்சிய 28 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நி.பி 571 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காலாவதியான பொது வைப்பு மீதிகளை துரிதமாக தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிய தருகின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,423,503 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,363,166 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 35,000 | - | - | - | 60,000 | 35,000 | 35,000 | - |
| (ii) | வாடகை | 14,207,600 | 14,725,350 | 14,472,425 | 252,925 | 14,197,600 | 14,082,261 | 13,648,561 | 433,700 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,307,350 | 2,005,773 | 2,005,773 | - | 1,697,715 | 2,031,502 | 2,031,502 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 134,015,293 | 32,700,068 | 22,738,792 | 9,961,277 | 16,627,443 | 17,032,249 | 4,201,336 | 12,830,913 |
| | மொத்தம் | 150,565,243 | 49,431,191 | 39,216,990 | 10,214,202 | 32,582,758 | 33,181,012 | 19,916,399 | 13,264,613 |

#### 2.2.2 ஆதன வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்குரிய இறைச்சிக் கடைகள், மீன் கடைகள் மற்றும் வாரச்சந்தைகள் என்பவற்றை குத்தகைக்கு வழங்கியமயால் அறவிடப்பட வேண்டிய 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் முன்கொண்டு வபைப்படும் ரூபா 768,277 ஆன நிலுவை குத்தகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | நிலுவைகளை பதிவழிப்பதற்கு உதவி உள்ளுராட்சி ஆணையாளரின் மூலம் தலைமை அமைச்சருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

### 2.2.3 இயந்திர உபகரணங்களை விடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குரிய மோட்டார் வீதிச் செப்பனிடுகள், மோட்டார் கிறேடர் இயந்திரம் மற்றும் டிபர் வண்டி என்பவற்றை வாடகைக்கு வழங்கியதால் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் ரூபா 610,912 ஆன நிலுவை வருமானம் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | இப்பணத்தை அறவிடுவதற்கு வெள்ளவாய நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து நோட்டீஸ் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊவா மாகாண சபையிடமிருந்து ரூபா 6,918,751 ஆன நீதிமன்றத் தண்டப்பணமும், ரூபா 1,935,683 தொகையான முத்திரைக் கட்டணமும் அறவிட வேண்டியிருந்தது. | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | இதுவரை ரூபா 3,659,821 ஆன நீதிமன்றத் தண்டப்பணமும் ரூபா 1,935,683 ஆன முத்திரைக் கட்டணமும் அறவிடப்பட்டுள்ள தாக அறிய தருகின்றேன். |

### 2.3 மிகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டில் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணத்திற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 87,749 தொகையொன்று அறவிட வேண்டியிருந்தது. | மிகைக் கட்டண பணம் அறவிடப்பட வேண்டும். | இம்மிகை அறவீடு தொடர்பில் குறித்த வழக்கு எம்பிலிபிட்டிய நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030'' தொடர்பாக சபை அறிந்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | இதற்கு மேலாக பதவியணியினர் பயிற்றுவிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டிற்காக நிலைபேறான அபிவிருத்தி திட்டமொன்று தயாரிப்பதற்கு எதிர்பார்ப்பதாக அறிய தருகின்றேன். |

#### (ஆ) நிறைவேற்றப்படாத இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப் பட்டிருந்த பாதீட்டில் உள்ளடக்கப் பட்டிருந்த ரூபா 50,875,168 மதிப்பீட்டுப் பெறுமதியான நிர்மாண வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட நிர்மாண வேலைகள் நிறைவேற்றப்பட வேண்டும் | நிதிஏற்பாடுகள் எதிர்பார்த்த வகையில் கிடைக்காமையால் உரிய நிர்மாண வேலைகளை நிறைவேற்றப்பட முடியவில்லையென அறிய தருகின்றேன் |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரித்தற்ற தனியார் கட்டிடத்தில் சபையின் ஊழியர் அல்லாதவர்கள் நடாத்திச் செல்வதற்காக 15 நூலகங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 552,437 பெறுமதியான 3050 புத்தகங்கள் மற்றும் ரூபா 210,000 பெறுமதியான 28 புத்தக இறாக்கைகள் என்பவற்றை மீள சபைக்குச் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவ்வாறே நூலகங்களும் தற்போது செயற்படு நிலையில் காணப்படவில்லை. | நூலகங்களை செயற்படு நிலைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ஆ) | திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவத்தின் செயற்பாடுகள் 2011 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சுற்றாடல் அனுமதிப்பத்திர மொன்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் சுற்றாடல் அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பதவியணியினர் வெற்றிடம்<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 02 பதவிகளுக்குரிய 02 ஊழியர்களுக்கு மிகையொன்று காணப்படுவதுடன் 03 பதவிகளுக்குரிய 03 வெற்றிடங்கள் காணப்பட்டன. | மிகை பதவியணியின் பதவிகள் அங்கீகரித்துக் கொள்ள வேண்டியதுடன் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | மிகை பதவியணியினர் செவனகல அலுவலகத்தின் நீர் செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள துடன் மிகை முன்பள்ளி பாடசாலை நிர்வாகி பதவியானது அந்நிர்வாகி ஓய்வுபெற்றதும் |

| | | |
|---|---|---|
| | | முடிவடையும். இதுவரை வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்பட வில்லையென அறிய தருகின்றேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான மோட்டார் கிரேடர் இயந்திமொன்று 2019 ஜனவரி 01 முதல் ஆகஸ்ட் 31 வரையிலான காலப்பகுதியில் ரூபா. 227,819 ஆன எரிபொருள் செலவினத்தை மேற்கொண்டு 223.6 மீற்றர் மணித்தியாலங்கள் ஓட்டத்தில் ஈடுபடுபட்டு 30 நிர்மாணங்களை நிறைவேற்றியதாக நாளாந்த ஓட்டக் குறிப்புகளில் காட்டப்பட்டிருந்தது. எனினும் அந்த நிர்மாணங்களுக்குரிய வேலை அறிக்கை மற்றும் 22 நிர்மாணங்களுக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு மற்றும் வேலை பூர்த்தி அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். | இந்நிர்மாணங்களுக்காக வேலை நிறைவு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு குறிதத் நிர்மாணங்களை மேற்கொள்வதாக அறிய தருகின்றேன். |

### 3.4.2 சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகார பிரதேசத்தில் சபைக்குச் சொந்தமான வீதிகள் இனங்காணப்பட்டு வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டிருக்க வில்லை. | வீதிகள் மற்றும் ஒழுங்கைகள் வர்த்தமானி மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் வீதகள் இனங்காணப்பட்டு வருவதுடன் அது முடிவடைந்தவுடைந்த உடனேயே வர்த்தமானி மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிய தருகின்றேன். |

## 3.5 பெறுகை

### 3.5.1 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் 200 கனமீற்றருக்கு அதிக அளவில் கிறவல் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட 12 வீதிச் செயற்திட்டங்களின் போக்குவரத்து விடயத்திற்காக செலுத்தும் போது கிறவல் 200 கன மீற்றருக்கு குறைந்த விலை வீதம் பயன்படுத்தப்பட்டு செலுத்தப்பட்டமையால் ரூபா 1,404,751 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிகமாக செலுத்தப்பட்ட வைகள் அறவிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ஆ) | செவனகல சமகிபுர நெலும் வெவ நீர் செயற்திட்டத்தை அபிவிருத்தி செய்யும் போது நீர்க் குழாய்களை பதிப்பதற்காக காண் வெட்டும் விடயத்திற்குரிய கொடுப்பனவை மேற்கொள்ளும் போது கிணறு வெட்டுவதற்குரிய கொடுப்பனவு விகிதம் பயன்படுத்தப்பட்டமையால் ரூபா 55,440 தொகை மேலதிகமாகச் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மேலதிகமாக செலுத்தப்பட்ட வைகள் அறவிடப்பட வேண்டும். | கருத்தரை தெரிவிக்கவில்லை. |
| (இ) | மீளாய்வாண்டின் போது சபை வாடகைக்குப் பெற்ற 02 பெகோ லோடர் இயந்திரங்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட்ட 04 மயான நிலங்களைத் அமைக்கும் வேலைகளின் போது அந்த 02 பெகோ லோடர் இயந்திரங்களுக்காக குறித்த மணித்தியால எண்ணிக்கையை விட 40.9 மணித்தியா லங்களுக்கு ரூபா 96,240 தொகை மேலதிகமாகச் | மேலதிகமாக செலுத்தப்பட்ட வைகள் அறவிடப்பட வேண்டும். | கருத்தரை தெரிவிக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) வீதிகளுக்கு கொங்கிறீட் இடும் 02 செயற்திட்டங்களுக்கு கொடுப்பனவு செய்யும் போது வீதியின் மேற்பரப்பிற்கு நீர் இட்டு பதப்படுத்தும் வேலை விடயம் நிறைவேற்றப்படா அதற்காக ரூபா 43,968 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது | | |
| (உ) வீதிகளுக்கு கொங்கிறீட் இடும் 03 செயற்திட்டங்களுக்குரிய அளவிடைப் பத்திரம் மற்றும் பூர்த்தி வேலை அறிக்கையின் பிரகாரம் வீதியின் உயரம் 6 அங்குலமாக இருக்க வேண்டிய போதிலும் வீதியின் பௌதீக பரிசோதனையின் போது 5 அங்குலமாக இருந்தமையால் கூட்டுமொத்தமாக ரூபா 407,494 தொகை மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மேலதிகமாக செலுத்தப்பட்ட வைகள் அறவிடப்பட வேண்டும். | கருத்தரை தெரிவிக்கவில்லை. |
| (உ) வீதிகளுக்கு கொங்கிறீட் இடும் 03 செயற்திட்டங்களுக்கு உரியதாக நிறைவேற்றப் படாதிருந்த சுருக்க கூட்டு (Constriction Joint) வேலை விடயத்திற்காக கூட்டுமொத்த மாக ரூபா 20,832 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிகமாக செலுத்தப்பட்ட வைகள் அறவிடப்பட வேண்டும். | கருத்தரை தெரிவிக்கவில்லை. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக போதியளவில் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 யூன் 01 ஆந் திகதி முதல் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சபையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் முகாமைத்துவக் குழுவை செயற்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக அறிய தருகின்றேன். |